செ.வெ.எண். 16/செப்டம்பர் தேதி : 04.09.2016

# பத்திரிக்கை செய்தி

## தேசிய தோட்டக்கலை இயக்கம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் தேசிய தோட்டக்கலை இயக்கம் 2016–17ம் ஆண்டில் ரூ. 264.254 இலட்சம் செலவினத்தில் 8 வட்டாரங்களில் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு மானியத்துடன் கூடிய பல்வேறு திட்டங்கள் தருமபுரி மாவட்டத்தில் ரூ. 264.254 லட்சம் செலவினத்தில் செயல்படுத்தப்படவுள்ளன.

**புதிய தோட்டங்கள் அமைத்தல்**

தோட்டக்கலை பயிர்களின், வீரிய ஒட்டு ரக காய்கறிகள், மா, கொய்யா, திசு வாழை, பப்பாளி, மல்லிகை, செண்டுமல்லி மற்றும் மிளகு ஆகியவற்றில் புதிய தோட்டங்கள் அமைப்பதற்கு ரூ. 64.411 இலட்சம் செலவில் 375 எக்டர் பரப்பிற்கு 40 சதம் மானியமும் பப்பாளி பயிர்களுக்கு 50 சதம் மானியமும் வழங்கப்படுகிறது.

**பாதுகாக்கப்பட்ட சாகுபடி**

பசுமைக்குடில்கள், நிழல்வலைகுடில்கள் மற்றும் நிலப்போர்வை போன்ற உயர் தொழில்நுப்ப சாகுபடி முறைகளை உள்ளடக்கிய பாதுகாக்கப்பட்ட சாகுபடி இனத்திற்கு ரூ. 100.688 இலட்சம் செலவினத்தில் பசுமைக்குடில்கள் மற்றும் நிழல்வலைகுடில்கள் 22500 சதுர மீட்டர் பரப்பிலும், நிலப்போர்வை 40 எக்டர் பரப்பிலும் 50 சதம் மானியத்தில் செயல்படுத்த திட்ட மிடப்பட்டுள்ளது.

**பண்ணை இயந்திர மயமாக்கல்**

பண்ணை இயந்திரங்களான மினி டிராக்டர்கள், பவர் டிரில்லர்கள், மற்றும் தெளிப்பான்கள் 25 சத மானியம் முதல் 50 சத மானியம் வரை அனுமதிக்கப்பட்டு தருமபுரி மாவட்டத்திற்கு ரூ. 8.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அறுவடை பின்செய் நேர்த்தி**

அறுவடைக்கு பிந்தைய மேலாண்மைக்கான உள்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள 50 சதம் மானியத்தில் குறைந்த செலவின வெங்காய சேமிப்பு கிடங்கு 1 எண்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

**சந்தை உள்கட்டமைப்பு**

தோட்டக்கலை பயிர்களுக்கான சந்தை உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்த மானியத்துடன் கூடிய ஊரக சந்தை, சில்லரை விற்பனை நிலையம் மற்றும் நடமாடும் விற்பனை நிலையம் அமைக்க விவசாயிகள் மற்றும் விவசாய உற்பத்தி குழுக்கல் வரவேற்கப்படுகின்றனர். இதற்காக ரூ. 22.750 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இதரவை**

இவ்வாண்டின் சிறப்பு திட்டமாக விவசாயிகள் தங்கள் தோட்டக்கலை பண்ணை பணிகளை தொய்வின்றி உரிய பருவத்தில் மேற்கொள்வதற்கு ஏதுவாக பண்ணை சாகுபடிக்கு தேவையான பொருட்கள் 50 சதம் மானியத்தில் விவசாயிகளுக்கு ரூ. 2000/–க்கு மிகாமல்

ரூ. 25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 1250 விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. உயர் தொழில் நுட்ப சாகுபடி முறைகளில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க ரூ. 8.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பபட்டுள்ளது. மேலும் 50 சதம் மானியத்தில் பழைய தோட்டங்கள் புணரமைத்தல், மண்புழு உர உற்பத்தி மற்றும் மண்புழு உர படுகை அமைப்பதற்கு ரூ. 9.70

இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தோட்டக்கலை பயிர்களுக்காக 30 சதம் மானியத்தில் எக்டருக்கு ரூ. 500/–க்கு மிகாமல் நுண்ணூட்ட கலவை விநியோகம் செய்ய ரூ.1.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பபட்டுள்ளது.

மாண்மிகு தமிழக முதல்வர் அவர்கள் வழங்கிய இந்த பொன்னான வாய்ப்பினை பயன்படுத்தி விவசாயிகள் பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு விவசாயிகள் தங்களது வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், தோட்டக்கலை அலுவலகர்கள் மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர்களை அணுகிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கூடுதல் தகவலுக்கு மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநரை தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண் 04342–232226

இப்பலன்களை பெறுவதில் ஏதேனும் புகார் இருந்தால் விவசாயிகள் 1077, 8903891077, 18004257016, 18004251071 என்ற எண்ணில் 24 மணி நேரமும் புகார் தெறிவிக்கலாம்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.